**Chenkaantal**
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 1, Special Issue - 1, January 2022** **E-ISSN: 2583-0481**

# The Lifestyle of Sangam Women

**K. Manikandan**, Guest Lecturer, Tamil Research Center, Government Arts College, Paramakudi, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0003-1836-2969**
**DOI: 10.5281/zenodo.6622315**

## Abstract

*Women are revered as virtues that bring good to the country, beacons of honour to mankind, and golden lamps that illuminate the home. It is undeniable that they were well versed in education, valiance, eloquence, patriotism, well versed in the fine arts, religion, devotion, and enthusiasm. The Tamil mothers of the Sangam period nurtured children and also nurture heroism and sacrifice in men. The theory of the world is that while people acquire knowledge, energy and heroism; new inclusions will constantly occur to them. The disadvantages of these radical ideas are small. It describes the living conditions of women living in ancient Tamil Nadu, often called Sangakala women, who had regard for their husbands as deities, chastity, parental virtue and fasting for the sake of their family. This article portrays such values of life in the Sangam women with ample evidence.*

**Keywords:** Sangam Literature, Sangakalam, Women, Life.

## Reference

[1] Subramanian. *Paripadal*. New Century Book House, Chennai, first edition 2004.
[2] Jayapal. *Akananuru*. New Century Book House, Chennai, 2004.
[3] Somasundaranar. *Aingurunooru.* Tirunelveli South Indian Saiva Siddhanta Nurupathippuk Kazhagam, Chennai 2008.
[4] Somasundaranar. *Kurunthogai*. Tirunelveli South Indian Saiva Siddhanta Nurupathippuk Kazhagam, Chennai 2008.
[5] Balasubramanian. *Purananuru*. New Century Book House, Chennai 2004.
[6] Balasubramanian. *Nattrinai*. New Century Book House, Chennai 2004.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்

அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்



மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# சங்ககால மகளிரின் வாழ்வியல்

**க. மணிகண்டன்,** கௌரவ விரிவுரையாளர், தமிழ் உயராய்வு மையம்,

அரசு கலைக் கல்லூரி, பரமக்குடி, தமிழ்நாடு, இந்தியா.

ORCiD: https://orcid.org/0000-0003-1836-2969

DOI: 10.5281/zenodo.6622315

**ஆய்வுச் சுருக்கம்**

*மகளிர் நாட்டுக்கு நலம் தரும் நற்செல்வங்களாக, மனித குலத்தை மாண்புறச் செய்யும் மணிகளாக, வீட்டிற்கு ஒளிதரும் பொன்விளககுகளாக தமக்கெனவாழாத் தியாகச் செம்மல்களாக மேன்மை பொருந்திய மெய்னராயினும், கல்லினும் திண்மை வாய்ந்த நெஞ்சம் படைத்தவர்களாக, கோயிலில் வைத்து கும்பிடத்தகும் தெய்வத்தன்மை வாய்ந்தவர்களாகப் போற்றப்பட்டு இன்ப வாழ்வு வாழ்ந்திருக்கின்றனர். அவர்கள் கல்விக் கேள்விகளில் வல்லவர்களாகவும், வீரம் மிக்கவர்களாகவும், கற்பென்னும் திண்மை பெற்றவர்களாகவும், நாட்டாட்சியில் நாட்டம் கொண்டவர்களாகவும், நுண்கலைகளில் தேர்ந்தவர்களாகவும், சமயத்துறையில் சார்புடையவராகவும், பக்தி நெறியைப் பரப்புகின்றவர்களாகவும், உரிமை வேட்கை மிகுந்தவர்களாகவும் இருந்தனர் என்பதை மறுக்கவோ, மறக்கவோ இயலாது. தான் ஈன்ற செல்வங்களுக்குப் பாலூட்டி வளர்த்த அன்னையர் வீரத்தையும், தியாகத்தையும் குழைத்து ஊட்டினர். தாம் பெற்ற மக்கள் அறிவிலோ, ஆற்றலிலோ, வீரத்திலோ முன்னனியில் நின்ற போழ்து அவர்களை புதியன புகுதலும் இடைவிடாமல் நிகழ்ந்துகொண்டிருத்தல் உலக தியற்கை. பழமை, புதுமை ஆகிய இரண்டினையும் ஒப்பிட்டு நோக்கும் போதுதான் இரண்டிற்கும் உள்ள ஏற்றத்தாழ்வு அல்லது நன்மை தீமைகள் நன்கு புலப்படும். பாரத நாட்டில் பண்டைக் காலத்தில் வாழ்ந்த மகளிர் வாழ்வியல் நிலைகள், சங்ககால மகளிரின் பணிகள், மகளிர்கான இலக்கணம், கணவனை தெய்வமாக எண்ணுதல், சொல் தவறாமை, கற்பு, பெற்றோர் சொல்வம் மதியாமை, கணவன் பெயரை சொல்லாமை, கைம்மை நோன்பு பற்றி விளக்குவதாக அமைகின்றது.*

**திறவுச்சொற்கள்:** சங்க இலக்கியம், சங்க காலம், பெண், வாழ்வியல், இலக்கணம்.

**முன்னுரை**

மகளிர் நாட்டுக்கு நலம் தரும் நற்செல்வங்களாக, மனிதகுலத்தை மாண்புறச் செய்யும் மணிகளாக, வீட்டிற்கு ஒளிதரும் பொன்விளககுகளாக தமக்கெனவாழாத் தியாகச் செம்மல்களாக மேன்மை பொருந்திய மெய்னராயினும், கல்லினும் திண்மை வாய்ந்த நெஞ்சம் படைத்தவர்களாக, கோயிலில் வைத்து கும்பிடத்தகும் தெய்வத்தன்மை வாய்ந்தவர்களாகப் போற்றப்பட்டு இன்ப வாழ்வு வாழ்ந்திருக்கின்றனர். அவர்கள் கல்விக் கேள்விகளில் வல்லவர்களாகவும், வீரம் மிக்கவர்களாகவும், கற்பென்னும் திண்மை பெற்றவர்களாகவும், நாட்டாட்சியில் நாட்டம் கொண்டவர்களாகவும், நுண்கலைகளில் தேர்ந்தவர்களாகவும், சமயத்துறையில் சார்புடையவராகவும், பக்திநெறியைப் பரப்புகின்றவர்களாகவும், உரிமை வேட்கை மிகுந்தவர்களாகவும் இருந்தனர் என்பதை மறுக்கவோ, மறக்கவோ இயலாது. தான் ஈன்ற செல்வங்களுக்குப் பாலூட்டி வளர்த்த அன்னையர் வீரத்தையும், தியாகத்தையும் குழைத்து ஊட்டினர். தாம் பெற்ற மக்கள் அறிவிலோ, ஆற்றலிலோ, வீரத்திலோ

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

முன்னனியில் நின்ற போழ்து அவர்களை புதியன புகுதலும் இடைவிடாமல் நிகழ்ந்துகொண்டிருத்தல் உலக தியற்கை. பழமை, புதுமை ஆகிய இரண்டினையும் ஒப்பிட்டு நோக்கும் போதுதான் இரண்டிற்கும் உள்ள ஏற்றத்தாழ்வு அல்லது நன்மை தீமைகள் நன்கு புலப்படும். பாரத நாட்டில் பண்டைக் காலத்தில் வாழ்ந்த மகளிர் வாழ்வியல் நிலைகளை பற்றி விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**சங்க கால மகளிர்**

பிணா, பெண், பெண்டிர், பெண்டு, பெண்மகள், மகள், இவையாவும் பெண்ணைச் சுட்டும். காதலி, காமக்கிழத்தி, கிழவி, கீழவோள், தாய், செவிலி, தோழி பொண்டாட்டி, மனையோள், மனைவி என்பன உறவுநிலைப் பெண் பெயர்களாகும். பெண் சமூகத்தில் பொருளீட்டத் தொழில் முனைதல், குடும்பப்பொறுப்பு, கணவன், தாய், தந்தை, நற்றாய், செவிலி, தோழி, பாங்கன் போன்றோருடன் தலைவி கொண்ட உறவுநிலை, பெண்ணின் பழக்கவழக்கம், கலை, கல்வி, பொழுதுபோக்கு, சடங்குகள் போன்றவை பெண்ணுக்கு நிலையாக அமைவது அவளுக்கு நிலைப்பேற்றை அளிக்கின்றனர். மேலும் பேடை, பெட, பெட்டை, பெண், மூடு, நாகு, கடமை, அளகு, மந்தி, பாட்டி, பினண, பிணவு, பிடி என்பன பெண்ணை பற்றிய மரபுபெயர்கள் ஆகும். இந்த பதிமூன்று பெயர்களும்,

**"பேடையும் பெடையும் பெட்டையும் பெண்ணும்**
**மூடும் நாகுங் கடமையும் அளகும்**
**மந்தியும் பாட்டியும் பிணையும் பிணவும்**
**அந்தஞ் சான்ற பிடியொடு பெண்ணே" ( மரபியல் 3)**

என்ற தொல்காப்பிய மரபியல் நூற்பாவினால் உணர்த்தப்பெறுகின்றன. பெண் என்றாலே குடும்பப் பொறுப்பு உடையவளாகிறாள். காலை எழுந்தது முதல் இரவு படுக்கும் வரை தொடர்ந்து வேலைப்பளு இருந்துகொண்டுதான் இருக்கும். இதனடிப்படையில் சங்க இலக்கிய மகளிர் என்ன மாதிரியான பணிகளைத் தொடர்ந்து செய்து வந்தார்கள் என்பதைப் பின்வருமாறு பட்டியலிடுகிறார் தாயம்மாள் அறவாணன். அவை, வீட்டுத்தோட்டம் உருவாக்கல், நீர் கொணர்தல், உணவு உற்பத்தி செய்தல், தினைப்புனம் காத்தல், திணையைக் காத்தல், ஊனைப் பக்குவம் செய்தல், மோர் நெய் விற்றல், ஆடு மேய்த்தல், தயிர் கடைதல், மீன் விற்றல், மீன் பிடித்தல், உப்பிற்கு நெல் பெறுதல், வயல்களில் களை எடுத்தல், கதிர் அறுத்தல், பூவிற்றல், ஆடைகளைத்தூய்மை செய்யும் புலைத்தி போன்றவை மகளிர் செய்யும் பணிகளாக சங்க காலத்தில் இருந்ததை அறிய முடிகின்றது.

சங்க இலக்கியத்தில் புன்னைகொட்டை ஒன்றை மணலில் இட்டு சென்ற ஒருவிளையாட்டுப் பெண் அவை முளைத்து வளர்வதைக்கண்டு அவற்றிற்கு நெய்யும் பாலும் ஊற்றி தன் பிள்ளையாக வளர்க்கிறார். தன் பிள்ளை வளர்ந்து பருவமடைந்து காதலனோடு இருக்கும்பொழுது, அப்புன்னை மரத்தை சகோதரியாக நினைத்து மரத்தடியில் நிற்காமல் நாணத்தோடு விலகி சென்றதை, **"விளையாட்டாமொடு வெண்மயல் அழுத்தி மறந்தனம் துறந்த காழ்முறை அகைய...நும்மொடு நகையே" (நற். 172)** என்ற வரிகள் எடுத்துக்காட்டுகிறது. மேலும், மகளிரின் கண் பெரியதாக இருத்தலை மகளிருக்கான இலக்கணமாக விளக்குகின்றனர்.

**"பூஒத்து அலமரும் தகையஏ ஒத்து**
**எல்லாரும் அறிய நோய் செய்தனவே**
**தேமொழித் திரண்ட மென்தோள் மாமலைப்**
**பரீஇ வித்திய ஏலை**

**குரீஇ ஒப்புவான் பெருமழைக் கண்ணே!" (குறுந். 72)**

என்னும் குறுந்தொகைப் பாடலில் பெருமழைக்கண்ணே என்பதற்குத் தலைவியின் கண்கள் அம்புகள்போல் நோய் செய்வதால் தலைவியின் மேல் தலைவனுக்கு இயற்கைப்புணர்ச்சி ஏற்படுகிறது. அவற்றை தலைவன் பாங்கனிடம் புலம்புவதாக மள்ளனார் பாடிய பாடலுக்கு விளக்கம் தெரிவித்துள்ளனர். இதனால் தலைவிக்கும் தலைவனுக்கும் களவு ஏற்படுகிறது. கற்பு வாழ்வில் பொருளின் முக்கியத்துவத்தை அறிந்த தலைவன் பிரியநேரிடுவான். அப்பொழுது தலைவிக்கு ஏற்படும் துன்பங்களும் தலைவியின் பண்புநலன்கள் என்று தொல்காப்பியர் விளக்குகிறார். கணவனைத் தெய்வமாக எண்ணுதல் சமுதாயத்தில் திருமணமாகிய பெண்கள் கணவருடன் இணைந்து குடும்பத்தைச் சிறந்தமுறையில் நடத்துவதில் முக்கியபங்கு வகிக்கின்றனர். கணவரிடம் அவரது தாய்க்கு நிகராக அன்பு காட்டுதல், வீட்டுவேலை செய்தல், தவறுகளைப் பொறுத்துக் கொள்ளுதல், தக்க சமயத்தில் அறிவுரை வழங்குதல் ஆகியயாவும் சிறந்த மகளிருக்கான குணங்கள்ஆகும்.

**சொல் தவறாமை**

கணவனின் சொல்லைத் தெய்வவாக்காக எண்ணுதல் வேண்டும். கணவனை எதிர்த்து பேசக்கூடாது. அவன் எண்ணங்களுக்கு உறுதுணையாக இருத்தல் வேண்டும். தலைவன் கற்புக்காலத்தில் பொருள்ஈட்டுவதற்காக தலைவியைப் பிரிந்து செல்கிறான். ஒருவனின் சொல்கேட்டு தலைவி ஆற்றியிருத்தலை, **"முல்லைசான்றகற்பின் மெல்லியற்குறுமகள்உறைவின்ஊரே" (நற். 142)**

என்ற நற்றினை பாடல் உணர்த்துகிறது. திருவள்ளுவரின் மனைவி மார்க்கசகாயன் என்பவனுடைய புதல்வி வாசுகியம்மாள். இவள் இறக்கும்பொழுது திருவள்ளுவரின் முகத்தைபார்த்து ஒவ்வொரு நாளும் உணவு பரிமாறும் பொழுது பக்கத்தில் ஊசியும் தண்ணீரும் வைக்க சொன்னதற்குக் காரணம் கேட்க திருவள்ளுவர் நீ படைத்த உணவு ஏதாவது இலையை விட்டுப்பக்கத்தில் சிதறி விழுந்தால் அன்னங்களை ஊசியால் குத்தி எடுத்து கழுவி இலையில் போட்டுக்கொள்வதற்காக ஆனால் இதுவரை அப்படி சிந்தும் படிபடைக்கவில்லை என்று துன்பம் ஆற்றாதவராய் எனக்கு குறைபாடின்றியும், குற்றம் இன்றியும் பணிவிடை செய்தவளே! பதிபக்தி நினைத்துத் தட்டாமல் நடந்தவளே! நான் உறங்கும் பொழுதும் என் கால்களை பிடித்து நன்றாக உறங்கியதற்குப் பின்னால் சென்று உறங்குபவளே! நான் எழுந்திருக்கும் முன் எழுந்து பணிந்து செல்லப்பட்டவளே! நீ இப்பொழுது என்னை வருந்தவிட்டுப் பிரிந்து விடப்போகிறாயா, இனிமேல் எனது கண் இரவில் எப்படி உறங்கும் என்றார். மனைவி தன்னுடைய சொல்தவறாமல் கடமைகளைச் செய்தாள் என்பதை பின்வரும் பாடல்வரிகள் மூலம் எடுத்துரைக்கிறார்.

**"அடிசிற் கினியாளே அன்புடை யாளே**
**படிசொல் தவறாத பாவாயடி வருடிப்**
**பின்றூங்கி முன்னெழுந்த பேதையே போதியோ**
**யென் தூங்கு மென் கண்ணீரா" (தனிப்பாடல் திருவள்ளுவர் நாயனார் சரிதம்)**

என்ற பாடல்வரி மூலம் அறியமுடிகிறது.

**கற்பு**

கற்புடைய பெண் தமது கணவர் யாதேனும் ஒரு காரணத்தினால் சினம் கொண்டால், வெறுப்படைந்த மனத்துடன் எதிர்நின்று பதில்வார்த்தை சொல்லமாட்டார்கள். கணவர் எறிந்து பேசினாலும், அடித்தல், உதைத்தல், குத்துதல், வெட்டுதல் போன்ற செயல்களை செய்தாலும்

அவர்களிடத்தில் ஆசையோடு மனம் இரங்கவேண்டும் என்பதையும் கற்புடைய பெண்ணிற்கு இலக்கணம் என்கிறார். தலைவன் பொருள் ஈட்டுவதற்காக தலைவியை தனிமையில் விட்டு செல்கிறான் தலைவன் பிரிந்த காலத்தில் சீறூரின் கண் தனிமையில் ஆற்றியிருத்தல் கற்புடை மகளிரின் கடமையாகும். காமம் சென்றநெறியென்பது பெருமைக்குரிய பண்பாகும். இதை முன்னோர்களும் ஆற்றியுள்ளனர். இனியும் தொடர்ந்து ஆற்றுவோம் என்பதை,

**"அகலுள் ஆங்கண் சீறூரேமே**
**அதுவேசாலும் காமம் அன்றியும்**
**எம்விட்டு அகறிர் கொன் ஒன்று**
**கூறுவல் வாழியர் ஐய!" (நற்.266)**

என்ற நற்றிணைப் பாடல் விளக்குகிறது. ஒருநாள் நகர்வலம் வந்த மன்னன் ஒரு கற்புடையவளைக் கண்டு காமமுற்றான் இரவினில் அவள் கணவன் இல்லாத சமயத்தில் கதவை தட்டினான். அந்த பெண்மணி கணவன் தான் வந்திருக்கிறார் என்று எண்ணி கதவை திறந்தாள். அவளைக் கண்டு தன் விருப்பத்தை வெளியிட்டான். அவள் நடுங்கி எத்தனையோ நியாயம் சொல்லியும் அவன் கேட்காமல் தன்னுடைய வாளை உருவினான் ஆசை கொண்ட உனக்கு ரோசம் இல்லை என்பதால் கற்புடையவள் தன்னை காத்துக்கொள்ள தன்னுயிரை துரும்பாய் எண்ணி நீராஜாவாக இருந்தாலும் என் கணவன்கால் தூசுக்கு வரமாட்டாய். உன் விருப்பத்திற்கு ஏற்றவாறு நடக்கவில்லை என்பதற்காக வெட்ட துணிந்தாய் இதற்கெல்லாம் பயப்படமாட்டேன் என்று அவன் முன்தலை குனிந்து நின்றாள். இவள் மனஉறுதியை எண்ணி மன்னன் திரும்பி சென்றான். இக்கதையில்அப்பெண் கற்பை மதித்தாளே தவிர இணங்கினால் அரசியாக வாழலாம் என்று நினைக்கவில்லை. இவளே கற்புடைய பெண் என்பதை

**"நரபதி நீயானாலும் நண்பரின் பாசத்துகட்குன்**
**சிரமகுட நிகராமோ சேர்கிலையேற் கொல்வானெனக்**
**கரவாளையுருவி நின்றாய் கற்பினுக்கோர் குறையின்றித்**
**தரமா நீயெனைக கொல்லிற் றந்தைதாய் குருநீயே" (நீதி நூல்-11)**

என்ற நீதிநூல் வரிகள் எடுத்துக்காட்டுகின்றது.

**பெற்றோர் செல்வம் மதியாமை**

பெண்களின் பிறந்தவீடு பெரும் செல்வச் செழிப்பில் இருப்பினும் திருமணத்திற்குப் பிறகு கணவன்வீடு வறுமையில் இருந்தாலும் பெண் தன் பிறந்த வீட்டிற்கு செல்லுதலும் பெருமையாக பேசுதலும் தவறாகும்.இதனை,

**"அன்னாய் வாழிவேண்டு அன்னை நம்படப்பைத்**
**தேன் மயங்கு பாலினும் இனிய அவர்நாட்டு**
**உவலைக் கூவற் கீழ**
**மான்உண்டு எஞ்சிய கலிழிநீரே" (ஐங். 203)**

என்ற ஐங்குறுநூறு பாடல் பின்வருமாறு விளக்குகிறது. வறுமையுற்ற ஒரு உத்தமி தாய்வீடு சென்று விருப்பம்போல உணவு உண்டு வந்து அவள் உடல் படிப்படியாக மெலிந்து வருகிறதை பற்றித்தோழி வினவியதற்குப் பதில் கூறுகிறாள். இரவுபெய்த மழைப்பதத்தில் அரசன் உழவனாய் யானையை ஏர் பூட்டிப் பனையைக் கலப்பையாக்கி உழுது வெள்ளி விதைக்க அது பொன்னாக எண்ணினேன். நான் பிறந்த வீட்டில் வாழ்வை நினைப்பதில்லை. விளைந்து முற்றாதவர கைக்குலையரிந்து கன்று காத்துப்

பாறையில் காய்ந்துப் பதரைப் போக்கி கிடைத்ததில் முன் கடன்கொடுத்தவர்களுக்கு கொடுத்துவிட்டு மிகுதியுள்ளதை காய்ச்சக் காட்டில்சென்று பட்டவிறகுகள் எடுத்து வந்து கூழ் காய்ச்சி குப்பைக்கீரையை நன்கு வேகவைத்து உண்டு வாழ்ந்தாலும் என் கணவன் வாழ்வே பெரிது என்றே எண்ணுகிறேன் என்று தன் தோழிக்கு விடை கூறுகிறாா். இதுவே ஒரு பெண்ணிற்குரிய சிறந்த குணம் என்று கூறுவதை அறியமுடிகின்றது.

**கணவன் பிரிவு தலைமை**

கணவனைப் பிரிந்திருக்கும் காலத்தில் மகளிர் அணிகலன்களை அணிதலையும், ஒப்பனை செய்து கொள்வதிலும் விரும்புதல் இல்லை. தலைவனின் பிரிவால் தலைவி துன்புற்று வருந்தினால் என்பதும் அவ்வருத்தத்தால் அவளது தோள்கள் மெலிந்து வளையல்கள் கழலப் பெற்றன என்பதையும், பூச்சூடுதல் போன்ற ஒப்பனைகள் அவள் செய்து கொள்ளவில்லை என்பதை, **"தொடிதோள் இவர்க! எவ்வமும் தீர்க! நெறி இருங்கதுப்பின் கோதையும் புனைக!" (அகம்.269)** என்ற அகநானூற்றுப் பாடல்வரி விளக்குகின்றது. கோவலன் மாதவியின் பால்மயக்கம் கொண்டிருந்த காலத்தில் கண்ணகி ஒப்பனை செய்து கொண்டாளில்லை. அழகிய சீரடிகளில் சிலம்பினை அணிந்தாலில்லை இடையில் மேகலையைப் பூட்டினாளில்லை. காதில் கொலையினை அணிந்தால் இல்லை கயல்கண்களில் அஞ்சனம் தீட்டினாளில்லை பிறை நுதலில் திலகம் வைத்தால் இல்லை கூந்தலில் புழுகு நெய்பூசினாளில்லை. மங்கல அணியைத் தவிற வேறு அணியை விரும்பாதவளாய் செயலற்ற நெஞ்சை உடையவளானாள்.

**புறங்கூறாமை**

பெண் என்பவள் ஒரு வீட்டின் குத்து விளக்கு விளக்கு எப்படி எரிந்து இருளடைந்த இடத்திற்கு வெளிச்சம் தருகின்றதோ அதேபோல ஒரு குடும்பத்தை நல்வழியில் செலுத்து பவர்கள் ஆகையால் தன் வீட்டில் நடந்தவற்றை பிறர் இடத்திலும் வெளியில் உள்ள தன் வீட்டில் உள்ளவர்களிடமும் குறை கூறுதல் புறங்கூறுதல் எனப்படும். தன் கணவன் என்ன தவறு செய்தாலும் அதை வெளியில் சொல்லாமல் கட்டி காப்பவள் சிறந்த மகளிர் என பரிபாடல் எடுத்தியம்புவதை,

**"சேர்க்கை இனியார் பால் சொல்வான் மனையாளால்**
**காக்கை கடிந்தொழுகல் கூடுமோ கூடா**
**தகவுடை மங்கையர் சான்றாண்மை சான்றார்**
**இகழினும் கேள்வரை யேத்தி இறைஞ்சவர்" (பரி. 20)**

என்ற பாடல் வரிகளில் காணமுடிகின்றது.

**கணவன் பெயரை சொல்லாமை**

பெண்கள் கணவனை தெய்வமாக எண்ணுவதால் கணவன் பெயரைச் சொல்லுதல் கடவுள் பெயரைச் சொல்வதற்கு சமம் என்கிறார்கள். குறிஞ்சி முல்லை நிலம் உடைய தலைவன் நாடன் என பெறுவான். மருத நிலத் தலைவன் ஊரன் எனப்பெறுவான். நெய்தல் நிலத் தலைவன் என பெறுவான் இதில் தலைவன் இத்தகையோரின் எனத் தெரிந்தும் தலைவன் சேர்ப்பன் எனப்பெயர் பெறுவான். இதில் தலைவன் இத்தகைய ஊரினன் எனத்தெரிந்தும், தலைவன் பெயர் தெரிந்தும் அதனை கூறி அழைத்தல் மகளிருக்கு இலக்கணம் ஆகாது என்பதனை,

**"நாடன் என்கோ? ஊரன் என்கோ?**
**பாடு இமிழ் பனிக் கடற் சேர்ப்பன் என்கோ?**

**யாங்கணும் மொழிகோஓங்குவாட் கோதையை?" (புறம். 49)**

என்ற புறநானூற்று வரிகள்மூலம் அறிய முடிகின்றது.

**கைம்மை நோன்பு**

கைம்மை என்பதற்குக் கணவனை இழந்த பெண் என்று பொருள். கணவனை இழந்த பிறகு தனக்குரிய அலங்காரம் எதுவும் செய்து கொள்ளாமல் இருந்தார்கள். தன் கணவன் போரில் மாய்ந்து விட்டதால் கைம்மை நோன்பு நோற்பதன் பொருட்டுத் தன் கூந்தலைக் கொய்து நீக்கினார்கள். இதனை,

**"மெய்ம் மறந்து பட்ட வரையாப் பூசல்**
**ஒள் நுதல் மகளிர் கைம்மை கூர**
**அவிர் அறல் கடுக்கும் அம் மென்**
**குவை இருங் கூந்தல் கொய்தல் கண்டே" (புறம். 25)**

என்ற புறநானூற்றுப் பாடல் விளக்குகிறது. மேலும் தன் குழந்தைகளுக்காகவே உயிருடன் இருப்பாள். மணமுடித்த கணவர் இறந்து விடின் பகலில் ஒருவேளை மட்டும் தான் உணவு உண்ண வேண்டும். வெற்றிலைப் பாக்கு போடக்கூடாது. மெத்தை முதலியவற்றில் படுத்து உறங்குதல் கூடாது. அரிய விரதங்களை கடைப்பிடிக்க வேண்டும் என் நேரமும் கடவுளை தியானித்து கொண்டே இருக்க வேண்டும் இப்படி உள்ளவர்களை மட்டும் சமுதாயம் உத்தமிகள் என்று பாராட்டுகின்றது.

**முடிவுரை**

சங்ககால மகளிர் தன் வாழ்வில் மகளிர்க்கான இலக்கணங்களாக கணவனை தெய்வமாக எண்ணுதல், சொல் தவறாமை, கற்பு, பெற்றோர் செல்வம் மதியாமை, கணவன் பிரிவு தாளாமை, புறங்கூறாமை, கணவன் பெயரை சொல்லாமை,கைம்மைநோன்பு போன்ற இலக்கண முறைப்படி சங்க காலப் பெண்கள் வாழ்ந்து வந்ததை சங்க இலக்கியங்கள் மூலம் அறிய முடிகின்றது. இது இக்கால பெண்கள் எவ்வாறெல்லாம் வாழலாம் என்பதற்கு ஒரு இலக்கணமாக சங்க இலக்கியம் அமைவதைக் காண முடிகின்றது.

**பார்வை நூல்கள்**

[1] சுப்பிரமணியன். *பரிபாடல்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, முதற்பதிப்பு 2004.

[2] ஜெயபால். *அகநானூறு*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.

[3] சோமசுந்தரனார். *ஐங்குருநூறு*. திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை 2008.

[4] சோமசுந்தரனார். *குறுந்தொகை*. கழக வெளியீடு, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை2008.

[5] பாலசுப்பிரமணியன். *புறநானூறு*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை 2004.

[6] பாலசுப்பிரமணியன். *நற்றிணை*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை 2004.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.